3) கொடுபடாமலுள்ள பழுதுபார்ப்பு செலவுகளுக்கு ரூ.1000 ஒதுக்குவது 4) நிலம், கட்டிடத்தின் தற்போதைய மதிப்பு ரூ.60,000 ஆகக்கொள்வது. மறுமதிப்பீட்டு கணக்கு, முதல் கணக்குகள், வங்கி கணக்குகள், இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

54. 31.3.2007 அன்று திருமதி. சாந்தா எடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

2006 மார்ச் 31–ஆம் நாளைய இருப்பாய்வு

பற்று இருப்புகள்	ரூ.	வரவு இருப்புகள்	ரூ.
எடுப்புகள்	40,000	முதல்	2,00,000
கைரொக்கம்	17,000	விற்பனை	1,60,000
வங்கியில் ரொக்கம்	65,000	பற்பல கடனீந்தோர்	45,000
கூலி	10,000		
கொள்முதல்	20,000		
சரக்கிருப்பு (1.4.05)	60,000		
கட்டிடம்	1,00,000		
கடனாளிகள்	44,000		
பொ.சீட்டு	29,000		
வாடகை	4,500		
கழிவு	2,500		
பொதுச் செலவுகள்	8,000		
அறைகலன்	5,000		
	4,05,000		4,05,000

சரிகட்டுதல்கள் : 1) இறுதிச் சரக்கிருப்பு ரூ.40,000 2) முதல் மீது வட்டி 6% அறுமதிக்கவும். 3) எடுப்பு மீது வட்டி 5% அறுமதிக்கவும். 4) கொடுபட வேண்டிய கூலி ரூ.1000 5) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ரூ.900
31.3.2006–ம் நாளோடு முடிவடையும் வியாபார இலாபநட்ட க/கு இருப்பு நிலை குறிப்பு தயார் செய்க.

55. பின்வரும் இருப்பு நிலைக்குறிப்பிலிருந்து அ) நடப்பு விகிதம் ஆ) நீர்மை விகிதம் இ) கடனாளிகள் விற்பனை விகிதம் ஈ) கடனீந்தோர் கொள்முதல் விகிதம் ஆகியவற்றை கணக்கிடுக.

இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	சொத்துகள்	ரூ.	
நேர்மைப் பங்குகள்	65,000	நிலம், கட்டிடம்	20,000
முன்னுரிமை பங்குகள்	15,000	இயந்திரம்	22,000
பொதுக்காப்பு	25,000	அறைகலன்	3,000
கடனீட்டு பத்திரங்கள்	35,000	சரக்கிருப்பு	47,000
செ.மா.சீட்டு	3,000	பொ.கட்டு	10,000
வங்கி மேல்வரை பற்று	3,000	கடனாளிகள்	23,000
கடனீந்தோர்	6,000	குறுகிய கால முதலீடுகள்	5,000
செலுத்த வேண்டிய செலவுகள்	6,000	முன்கூட்டி செலுத்திய செலவுகள்	1,000
		ரொக்கம்	10,000
	1,50,000		1,50,000

கடன் விற்பனை ரூ.1,65,000. கடன் கொள்முதல் ரூ.44,000

50. பின்வரும் விவரங்களைக் கொண்டு மார்ச், ஏப்ரல், மே மாதத்திற்கான ரொக்க திட்டப் பட்டியலை தயாரிக்கவும்.

மாதம்	கடன் கொள்முதல்	கடன் விற்பனை	அலுவலகச் செலவுகள்
	ரூ.	ரூ.	ரூ.
2006 சனவரி	2,00,000	2,50,000	50,000
2006 பிப்ரவரி	3,50,000	3,00,000	60,000
2006 மார்ச்	3,00,000	4,50,000	70,000
2006 ஏப்ரல்	4,00,000	2,00,000	80,000
2006 மே	5,00,000	3,50,000	70,000

கூடுதல் தகவல்கள் : 1) எதிர்நோக்கும் ரொக்க இருப்பு 1.3.2007 ரூ.75,000 2) சரக்களித்தோர் அறுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள். 3) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்
4) செலவுகள் ஒரு மாத காலம் கடந்த பின் செலுத்தப்பட வேண்டும் 5) ஏப்ரல் மாதத்தில் ரூ.95,000 க்கு நிலைசொத்துகள் விற்றல்.

57. முன் நிறுமம் பங்கொன்று ரூ.10 வீதம் 20,000 பங்குகளை ரூ.3 முனைமத்தில் வெளியிட்டது விண்ணப்பத்தின் போது ரூ.3 ஒதுக்கீட்டின் போது ரூ.5 (3 முனைமம் உட்பட) முதல் அழைப்பு ரூ.3 இறுதி அழைப்பு ரூ.2
30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ரூ.5000 பங்குகள் மீதான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 5000 பங்குகள் மீது பெறப்பட்ட விண்ணப்பத்தொகை ஒதுக்கீட்டுத் தொகை சரி செய்யப்பட்டது. நிலுவைத் தொகை உரிய நேரத்தில் பெறப்பட்டது. குறிப்பேட்டு பதிவுகள் தந்து, முதல் க/கு, பங்கு க/கு, பத்திர முனைம கணக்குகள், இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

12

Reg. No.

இரண்டாம் திருப்புத் தேர்வு - 2017

கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 200

பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **30 x 1 = 30**

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. .....அடிப்படையாகக் கொண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.
2. கூடியுள்ள வருமானம் இருப்புநிலைக் குறிப்பில்.....பக்கத்தில் தோன்றும்.
3. 31.3.2010 இருப்பாய்வின்படி 10% வங்கிக்கடன் (1–4–2009) ரூ.20,000 மற்றும் அளித்த வட்டி ரூ.1500 கொடுபட வேண்டிய வட்டி.....
4. ஒரு நிலை அறிக்கை.....போன்று தோற்றமளிக்கும்.
5. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ரூ.2,50,000. அவருடைய பொறுப்புகள் ரூ.75,000. அவருடைய முதல்.....ஆகும்.
6. .....காலத்திற்கு பயனளிக்கக்கூடிய சொத்துகள் நிலைச் சொத்துகள் எனப்படும்.
7. விடுகருவிகள் போன்ற சொத்துகள் மீது தேய்மானம் நீக்க ஏற்றமுறை .....முறையாகும்.
8. ரூ.1,00,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம்.....
9. நீர்மை விகிதத்தை .....எனவும் அழைக்கலாம்.
10. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின்.....இருப்பாகும்.
11. .....முதல் ஏறுவாட்டில் நடப்புக் கணக்குகள் தயாரிக்கப்படமாட்டாது.
12. மறுமதிப்பீட்டில் ஏற்பட்ட.....மறுமதிப்பீட்டுக் கணக்கின் இருப்பு வெளிப்படுத்தும்.
13. கூட்டாளிகள் விலகும் பொழுது தொடரும் கூட்டாளிகள்.....பெறுகின்றனர்.
14. அட்டவணை 'அ' வின்படி அனுப்பு நிலுவைக்கு கணக்கிடப்படும் வட்டி.....
15. ஒரு நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய 2,00,000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 1,50,000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டால், அந்நிறுவனத்தின் ஒப்பா முதல்.....ஆகும்.

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

16. முன்கூட்டிப் பெற்ற வாடகை ஒரு அ) வருமானம் ஆ) சொத்து இ) பொறுப்பு
17. 31–3–2010 ல் இருப்பாய்வின்படி கடனாளிகள் ரூ.2,20,000 சரிக்கட்டுதலில் ரூ.20,000 வராக் கடனாக சேர்க்கைசெய்யப்பட்டது. கடனாளிகள் மீது 10% வராக் ஐயக்கடன் ஒதுக்கு அ) ரூ.2,00,000 ஆ) 20,000 இ) 2,40,000
18. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது
அ) வியாபார கணக்கு ஆ) இலாபநட்ட அறிக்கை இ) நிலை அறிக்கை
19. இறுதி முதல் 32,000, எடுப்பு 4,800, தொடக்க முதல் 20,000 இலாபம்..... அ) ரூ.56,800, ஆ) ரூ.16,800 இ) 47,200
20. தேய்மானம் ஏற்படுவது
அ) சொத்து தேய்வடைவதால் ஆ) சொத்தின் சந்தைவிலை குறைவதால் இ) பணத்தின் மதிப்பு குறைவதால்
21. சொத்தின் ஏட்டு மதிப்பு ரூ.2,00,000 இறுதி மதிப்பு ரூ.30,000, பயனளிப்புக்காலம் 10 ஆண்டுகள். தேய்மானத் தொகை.....அ) 2,30,000 ஆ) 23,000 இ) 17,000
22. மொத்த இலாப விகிதத்தில் உள்ள உறவுமுறை அ) மொத்த இலாபம் மற்றும் மொத்த விற்பனை ஆ) மொத்த இலாபம் மற்றும் கடன் விற்பனை இ) மொத்த இலாபம் மற்றும் ரொக்க விற்பனை
23. விற்ற பொருளின் அடக்கவிலை ரூ.40,000 சராசரி சரக்கிருப்பு ரூ.8,000. சரக்கிருப்பு விற்பனை விகிதம்
அ) 5 மடங்கு ஆ) 4 மடங்கு இ) 7 மடங்கு
24. திட்டப்பட்டியல் என்பது.....காலத்திற்கான மதிப்பீடு ஆகும். அ) எதிர் ஆ) நடப்பு/நிகழ் இ) கடந்த
25. கூட்டாண்மையில் ஒப்பந்தம் அ) கட்டாயமானது ஆ) கட்டாயமில்லை இ) தேவையில்லாதது
26. கூட்டாளி சேர்க்கையின் பொழுது நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்று செய்யப்படும் கணக்கு
அ) கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ஆ) நற்பெயர் க/கு இ) மறுமதிப்பீடு க/கு
27. A, B, C ஆகிய கூட்டாளிகளின் இலாப் பங்கு முறையே 1/2, 2/3, 1/6 ஆகும். B கூட்டாண்மையிலிருந்து விலகினால் புதிய இலாப் பகிர்வு விகிதம்.....அ) 3 : 1 ஆ) 1 : 3 இ) 1 : 2
28. வெளிச்சொல்லும் கூட்டாளிக்குச் சேரவேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லையெனில், அத்தொகை மாற்றப்படும் கணக்கு அ) முதல் கணக்கு ஆ) கடன் கணக்கு இ) ரொக்க க/கு
29. பொது வெளியீடு அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச நாள்கள்
அ) 3 நாள்கள் ஆ) 5 நாள்கள் இ) 7 நாள்கள்
30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.1500 இப்பங்குகளை மறு வெளியீடு செய்த வகையில் நட்டம் ரூ.700 எனில் முதலிள காப்பு.....அ) ரூ.1500 ஆ) ரூ.700 இ) ரூ.800

பகுதி – ஆ

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **10 x 5 = 50**

31. வாராக்கடன் என்றால் என்ன?

32. மாற்றுதல் முறை என்றால் என்ன?
33. மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன?
34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் முக்கியத்துவம் யாவை?
35. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்கப் பயன்படுத்தும் முறைகள் யாவை?
36. நற்பெயர் என்றால் என்ன?
37. அழைப்பு முன்பணம் என்றால் என்ன?
38. எடுப்பு ரூ.40,000 எடுப்பின் மீது வட்டி 5% கணக்கிட்டு சரிகட்டுப் பதிவு, மாற்றுப்பதிவும் தருக.
39. விடுபட்ட தொகையைக் காண்க.

எடுப்புகள்	1,50,000
கூடுதல் முதல்	30,000
தொடக்க முதல்	3,00,000
அவ்வாண்டில் இலாபம்	40,000
இறுதிமுதல்	?

40. திருவாளர்கள் விக்ரம் கோ ரூ.5,00,000 மதிப்புள்ள பொறிவகை ஒன்றை வாங்கியது. அச்சொத்தின் மீது ஆண்டுதோறும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் அனுமதித்தது. அப்பொறி வகையின் பயனளிப்புக்காலம் 10 வருடங்கள். பயனற்ற நிலையில் அதன் இறுதி மதிப்பு ரூ.50,000 எனில் தேய்மான விகிதத்தைக் கணக்கிடுக.
41. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு முதல் – விற்பனை விகிதம் காண்க.

	ரூ.
விற்பனை	3,75,000
விற்பனைத் திருப்பம்	25,000
சாதாரணப் பங்கு முதல்	1,00,000
நீண்ட காலக்கடன்	50,000
கப்புகள்	25,000

42. ஏப்ரல் 1, 2009 அன்று தொடக்க ரொக்க இருப்பு ரூ.50,000 அம்மாதத்தில் எதிர்பார்க்கும் பெறுதல்கள் ரூ.80,000 மற்றும் செலுத்தல்கள் ரூ.1,00,000. ஏப்ரல் 30, 2009 நாளாக இறுதி ரொக்க இருப்பினை கணக்கிடுக.
43. ஆஷா, நிஷா என்ற கூட்டாளிகள் சமமாக இலாப நட்டம் பகிர்ந்து வருகின்றனர். ஆஷா ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ரூ.2000 திரும்ப எடுத்துக் கொள்கிறார். நிஷா ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ.1000 திரும் எடுத்துக கொள்கிறார். ஆண்டுக்கு 10% வீதம் எடுப்பு மீதான வட்டியைக் கணக்கிடுக.
44. பாலா வரையரு நிறுமம் ஒவ்வொன்றும் ரூ.10 முகமதிப்புள்ள 10,000 சாதாரணப் பங்குகளை பங்கு ஒன்றுக்கு 10% முனைமத்தில் முழுவதும் செலுத்தப்பட்டவையாக வெளியிட்டது. குறிப்பிட்ட பதிவுகள் தருக.

பகுதி – இ

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 x 12 = 60

45–வது வினா கட்டாயம் விடையளிக்கவும்.

45. அ) 31.03.2008 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000
சரிகட்டுதல்கள் : 1) போக்கெழுத வேண்டிய வாராக் கடன் ரூ.5,000 2) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக. 3) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. சரிகட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரங்கள் எவ்வாறு இறுதி கணக்குகளில் தோன்றும்ம என்பதைக் காட்டுக. **(அல்லது)**
ஆ) திரு. ஆனந்த் ரூ.2,00,000 முதலுடன் 1.4.2005 அன்று தொழில் தொடங்கினார். அவர் தனது சொந்த உபயோகத்திற்காக ரூ.10,000 எடுத்துக் கொண்டார். அவர் ரூ.50,000 கூடுதல் முதலாக இட்டார். அவருடைய 31.3.2006 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

	ரூ.
வங்கி இருப்பு	10,000
சரக்கிருப்பு	80,000
பற்பல கடனாளிகள்	40,000
அறைகலன்	3,000
கைரொக்கம்	5,000
பற்பல கடனீந்தோர்	30,000
கொடுக்க வேண்டிய செலவுகள்	2,000

அவர் தனது எடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2005–2006 ஆம் ஆண்டிற்கான அவரது இலாப நட்டங்களை கண்டறிக.
46. தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டிய தேவைகள் யாவை?
47. ரொக்கத் திட்டப்பட்டியலின் தன்மைகள் மற்றும் நன்மைகளை விவரி.
48. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
49. சஞ்சய் வரையரு நிறுமம் 1.1.2004 ரூ.5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ.3,70,000 க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுக்கு 10% வீதம் நேர்கோட்டு முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 அன்று கணக்குகள் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மான கணக்கினை மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.
50. பின்வரும் விவரங்களைக் கொண்டு அ) கொத்த இலாப விகிதம் ஆ) நிகர இலாப விகிதம் இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம் ஈ) கடனாளிகள் விற்பனை விகிதம் கணக்கிடுக.

	ரூ.
விற்பனை	1,50,000
விற்ற பொருளின் அடக்கவிலை	1,20,000
தொடக்க சரக்கிருப்பு	29,000
இறுதிச் சரக்கிருப்பு	31,000
கடனாளிகள்	15,000
நிர்வாகச் செலவினங்கள்	15,000

51. மாயா, மேகா என்னும் கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 1.4.2004 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.80,000, ரூ.60,000 ஆகும். சரிகட்டுதல்களுக்கு முன் 2005 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ.30,000 அந்த ஆண்டின் எடுப்புகள் முறையே மாயா ரூ.5,000 மேகா ரூ.4,000 ஆகும்.
கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க் கண்டவற்றிற்கு வகை செய்கிறது.
1. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% 2. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% 3. மாயா, மேகா இருவரும் முறையே ரூ.5000 ஊதியம் பெறுகின்றனர். 4. மாயா கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவு பெறுகின்றனர்.
இலாப நட்ட பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்கையும், நடப்பு கணக்கையும் காட்டுக.
52. அருண் லிமிடெட்டின் ஒன்று ரூ.100 முகமதிப்புடைய 10% முனைமத்தோடு கூடிய 500 பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை ரூ.30 மற்றும் இறுதி அழைப்புத்தொகை ரூ.20 ம் செலுத்தத் தவறியதால் அலை இயக்குநர்களால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளில் 300 பங்குகள் மட்டும் ரூ.80 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன.
தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளும், ஒறுப்பிழப்பு கணக்கும், முதலினைக் கப்பு கணக்கும் தயாரிக்க.

பகுதி – ஈ

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3 x 20 = 60

53. அ) திரு. சங்கரின் ஏடுகள் 2006, ஏப்ரல் 1 அன்று காட்டும் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
முதல்	83,030	நற்பெயர்	18,540
பற்பல கடனீந்தோர்	9,010	அறைகலன்	14,010
		பற்பல கடனாளிகள்	46,830
		வங்கி ரொக்கம்	12,660
	92,040		92,040

பிற தகவல்களில் :

பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	2,12,460
எடுப்புகள்	81,600
வாடகை கொடுத்தது	9,450
சம்பளம் கொடுத்தது	18,300
பற்பல கடனீந்தோருக்கு அளித்தது	90,360
பல்வகைச் செலவுகள் செலுத்தியது	3,840
சரக்கிருப்பு (31.3.2007)	32,000
பற்பல கடனாளிகள் 31.3.2007	56,700
பற்பல கடனீந்தோர் 31.3.2007	16,000
வங்கி ரொக்கம் 31.3.2007	21,570

2007 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலப நட்ட கணக்கினையும், இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க. **(அல்லது)**
ஆ) விஜி, ராஜி என்ற கூட்டாளிகள் முறையே 65%, 35%என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

1.4.2006 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்		ரூ.	சொத்துகள்	ரூ.
பற்பல கடனீந்தோர்		25,000	ரொக்கம்	2,000
வங்கி மேல்வரைப்பற்று		13,000	கடனாளிகள்	30,000
இலாபநட்டக் கணக்கு		14,000	சரக்கிருப்பு	20,000
முதல்			அறைகலன்	8,000
விஜி	40,000		நிலம் கட்டிடம்	50,000
ராஜி	30,000		நற்பெயர்	
		70,000		
		1,22,000		1,22,000

அவர்கள் வினிதா என்பவரை 1/10 பங்கு கூட்டுக்கு சேர்த்துக கொண்டனர்.
1) வினிதா ரூ.30,000 முதல் கொண்டு வருவது 2) நற்பெயரின் தற்போதைய மதிப்பு ரூ.15,000 ஆக அதிகரிப்பது